DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No. II , Sattur.

# CC No. 01/2018

Deposition of Witness for P.W.3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.சுப்புலட்சுமி | ஜாதி | : | |
| த/பெ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 13.06.2018

<u>முதல் விசாரணை :</u>

நான் கேரளாவில் குடியிருக்கிறேன். நான்இல்லத்தரசியாக இருக்கிறேன். எனக்கு இரண்டு மகன்கள். நான் பிறந்த ஊர் உப்புபட்டி. என்னுடைய மூத்த மகன் மருதுபாண்டி உப்புப்பட்டியில் குடியிருக்கிறார். எனது இளைய மகன் வெள்ளைச்சாமி கேரளாவில் குடியிருந்து வருகிறார். கடந்த 01.08.2017ம் தேதி நான் எனது மூத்த மகனை பார்ப்பதற்காக உப்புப்பட்டிக்கு வந்திருந்தேன். எனது மகனை பார்த்து விட்டு மாலை 3.30 மணி அளவில் கேரளா செல்வதற்காக உப்புப்பட்டியிலிருந்து சாத்தூர் பஸ்நிலையம் வந்து சாத்தூர் ரயில்வே ஸ்டேசன் செல்வதற்காக என் மகன் சற்று முன்பாகவும், நான் அவருக்கு பின்பும் சென்று கொண்டிருந்தோம். கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வரும் போது அங்குள்ள பள்ளியலிருந்து 10 அடி தூரத்தில் சென்று கொண்டிருந்த போது இரு சக்கர வாகனத்தில் 2 நபர்கள் வந்தார்கள். வாகனத்தை ஒட்டி வந்த நபர் ஹெல்மட் அணிந்து பின்னால் அமர்ந்திருந்த நபர் சிறிய டவுல் துணியை வைத்து முகத்தில் பாதியாக கட்டி கொண்டு வந்தார். இரு சக்கர வாகனத்தில் பின்னால் வந்த நபர் நான் கழுத்தில் அணிந்திருந்த 3 1/4 பவுன் எடையுள்ள தங்க செயினை பறித்துக்கொண்டார். நான் கீழே விழுந்து விட்டேன். நகையை பறித்து விட்டு அவர்கள் இரு சக்கர வாகனத்தில் வேகமாக சென்று விட்டார்கள். எனது மகன் மருதுபாண்டி வேகமாக சென்று பிடிப்பதற்காக முயன்ற போது அவர்களை பிடிக்க முடிய வில்லை. அதன் பின்னர் சாத்தூர் காவல்நிலையம் சென்று சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க கோரி புகார் மனு அளித்தேன். அந்த புகார் மனு என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான். அதில் உள்ள கையெழுத்து

என்னுடையது தான். அதன் பின்னர் 30.08.17ம் தேதி சாத்தூர் கா.நி போலீசார் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு எனது செயின் கிடைத்து விட்டதாகவும், வந்து அடையாளம் காட்டும் படியும் கூறினார். அதன் பின்னர் மறுநாள் காவல் நிலையம் வந்தேன். அங்கே எனது காணாமல் போன நகை இருந்தது. அதை போலீசாரிடம் அடையாளம் காட்டினேன். எனது கழுத்திலிருந்து நகையை பறித்து சென்ற அந்த நபர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள ஆஜர் எதிரி தான். பின்னர் அந்த நகையை நான் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுகொண்டேன். அந்த நகையை நான் இன்று நீதிமன்றத்திற்கு எடுத்து வந்துள்ளேன். என்னிடம் பறித்து சென்ற தங்க நகை நான் கொண்டு வந்த நகை தான். சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி.

இல்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No. II , Sattur.

# CC No. 01/2018

Deposition of Witness for P.W.4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.திருமலைராஜா | ஜாதி | : | |
| த/பெ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 13.06.2018

<u>முதல் விசாரணை :</u>

நான் எதிர்கோட்டையில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.3 சுப்புலட்சுமி எங்கள் பக்கத்து ஊரை சேர்ந்தவர். மருதுபாண்டி எனக்கு தம்பி முறை வேண்டும். கடந்த 01.08.2017ம் தேதி நான் எனது வீட்டில் இருந்த போது மாலை 4.30 மணி அளவில் மருதுபாண்டி என்னை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உப்புப்பட்டியிலிருந்து சாத்தூர் ரயில்வே ஸ்டேசன் செல்வதற்காக தானும் , தனது அம்மா சுப்புலட்சுமியும் சாத்தூர் பஸ்நிலையத்தில் இறங்கியதாகவும், ரயில்வே ஸ்டேசன் போகும் வழியில் K.C.A.T பள்ளி அருகில் சென்று கொண்டிருந்த போது இரு சக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்கள் பின்னால் அமர்ந்த நபர் சுப்புலட்சுமியின் கழுத்தில் இருந்த 3 1/4 பவுன் எடையுள்ள தங்க தாலி செயினை பறித்து சென்றதாக என்னிடம் கூறினார். மருதுபாண்டி அவர்களை பிடிக்க முயற்சி செய்த போது அவர்கள் தப்பி ஓடி விட்டதாக என்னிடம் கூறினார். நான் உடனே சாத்தூர் வந்தேன். பின் நானும் சுப்புலட்சுமி, மருதுபாண்டி , மாரீஸ்வரன் ஆகியோர் காவல்நிலையம் சென்று சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க கோரி சுப்புலட்சுமி புகார் அளித்தார். அதன் பின்னர் ஒரு மாதம் கழித்து நகை கிடைத்து விட்டதாக என்னிடம் கூறினார். அந்த நகையை நீதிமன்றம் மூலம் பெற்றுக்கொண்டதாக என்னிடம் கூறினார். சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி.

இல்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No. II , Sattur.

# CC No. 01/2018

Deposition of Witness for P.W.5

| பெயர் | : | திரு.மாரீஸ்வரன் | ஜாதி | : | |
|---|---|---|---|---|---|
| த/பெ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 13.06.2018

<u>முதல் விசாரணை :</u>

நான் உப்புபட்டியில் குடியிருக்கிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.3 சுப்புலட்சுமி எனது அத்தை ஆவார். மருதுபாண்டி எனது அத்தை மகன் ஆவார். கடந்த 01.08.2017ம் தேதி நான் எனது வீட்டில் இருந்த போது மாலை 4.30 மணி அளவில் மருதுபாண்டி என்னை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அன்றையதினம் எனது அத்தை சுப்புலட்சுமி கேரளாவிற்று செல்வதற்காக உப்புப்பட்டியிலிருந்து சாத்தூர் ரயில்வே ஸ்டேசன் செல்வதற்காக தானும் , தனது அம்மா சுப்புலட்சுமியும் சாத்தூர் பஸ்நிலையத்தில் இறங்கியதாகவும், ரயில்வே ஸ்டேசன் போகும் வழியில் இரு சக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்கள் எனது அத்தை சுப்புலட்சுமியின் கழுத்தில் இருந்த 3 1/4 பவுன் எடையுள்ள தங்க தாலி செயினை பறித்து சென்றதாக என்னிடம் கூறினார். மருதுபாண்டி அவர்களை பிடிக்க முயற்சி செய்த போது அவர்கள் தப்பி ஓடி விட்டதாக என்னிடம் கூறினார். நான் உடனே சாத்தூர் வந்தேன். பின் நானும் சுப்புலட்சுமி, மருதுபாண்டி , திருமலைராஜா ஆகியோர் காவல்நிலையம் சென்று சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க கோரி சுப்புலட்சுமி புகார் அளித்தார். அதன் பின்னர் 30.08.17ம் தேதி நகை கிடைத்து விட்டதாக போலீசார் கூறியதாகவும், அந்த நகையை பெற்றுக்கொண்டதாகவும் மருதுபாண்டி என்னிடம் கூறினார். சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி.

இல்லை.